**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 178/2017**

PW2 – லதா க/பெ. ஆனந்தன்
நாள்–07.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

தாவா 1 வது அயிட்ட சொத்தில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு எண் 761 மற்றும் மின் இணைப்பு எண் 1911 என்றால் சரிதான். மேற்படி இரண்டு மின் இணைப்புகளும் சிங்காரவேலன் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. இறந்துபோன ரவிச்சந்திரன் என்பவருக்கு அவரது மனைவி பானுமதி மற்றும் அவரது தாயார் சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என அசல் வழக்கு எண் 174/2009 வழக்கில் மயிலாடுதுறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அது அனுதாபத்தின் பேரில் ஏற்பட்டதாகும்.

அசல் வழக்கு எண் 174/2009–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக நாங்கள் இதுநாள் வரையில் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரவிச்சந்திரன் தலைஞாயிறு கூட்டுறவு சங்கத்தில் மஸ்தூராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். ரவிச்சந்திரனின் இறப்பிற்கு பிறகு பண பலன்களை அவரது தாயார் மற்றும் மனைவி தான் சரிபாகமாக பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரனின் ஓய்வூதியத்தை அவரது மனைவி பானுமதி தான் பெற்று வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அனுதாபத்தின் பேரில் எனது தாயார் விட்டுக்கொடுத்துவிட்டார். எனது தாயார் அனுதாபத்தின் பேரில் தான் விட்டுக்கொடுத்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும்.

எனது தாயார் அனுதாபத்தின் பேரில் விட்டுக்கொடுத்ததாக சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு சிங்காரவேலன் பெயரில் தான் சொத்து வரி உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு ஏற்பட்டதாகும். சிங்காரவேலன் தான் தற்போதும் நகராட்சிக்கு சொத்து வரி செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரவிச்சந்திரன் 1-ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதும் 1-ம் பிரதிவாதியுடன் கணவன் மனைவியாக வாழவில்லை எனவும் வழக்கிற்காக பொய்யாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எனது தகப்பனார் முதலில் எனக்கும், எனது சகோதரியான 1-ம் வாதிக்கும் உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி உயிலானது எனது தகப்பனாரால் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன்பிறகு தான் தாவா 1 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சிங்காரவேலன் பெயரில் 03.12.2015-ல் எனது தகப்பனார் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாத சமயத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். 03.12.2015-ல் எனது தகப்பனாரால் நல்ல உடல்நிலையிலும், விருப்பத்துடனும் எழுதி வைக்கப்பட்ட உயில் என்று சொன்னால் சரியல்ல.

தாவா 2 வது அயிட்ட சொத்து ரவிச்சந்திரனின் பெயரில் கிரயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தகப்பனார் வாங்கி அவரது பெயரில் கிரயம் பதிவு செய்யப்பட்டது. எனது தகப்பனாரால் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. தாவா 2 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து ரவிச்சந்திரனின் பெயரில் உள்ள கிரயப் பத்திரத்தில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. கிரய ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனது மூத்த சகோதரரான கணேசனின் மகள் மலர்விழி சாட்சி கையொப்பம் செய்துள்ளார். மற்றொரு

சாட்சி எனக்கு நினைவில்லை. தாவா 2 வது அயிட்ட சொத்து ரவிச்சந்திரனின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவரது இறப்பிற்கு பிறகு 1–ம் பிரதிவாதிக்கு வாரிசுரிமை படி பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

தாவா 1 வது அயிட்ட சொத்து உயிலின் படி சிங்காரவேலனுக்கும், தாவா 2 வது அயிட்ட சொத்து வாரிசுபடி 1–ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்பதால் நாங்கள் எவ்வித பாகப்பிரிவினையும் கோர இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆனது 1–ம் வாதியால் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல நானும் சேர்ந்து தான் அனுப்பியுள்ளேன். 1–ம் பிரதிவாதி தரப்பில் தகுந்த பதில் அறிவிப்பு அனுப்பப்பட்ட நிலையிலும் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன் இறந்த பிறகு மனஉளைச்சலில் இருந்த 1–ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு ஆவணங்களை மோசடியாக எடுத்து வந்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.